**அக்மீமன பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 21 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 07 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, அக்மீமன பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான வீதவரி அறவீடு செய்யப்பட்ட போது வழங்கப்பட்ட ரூபா 148,415 தொகைக்கான கழிவு, மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்நது.

(ஆ) நிலுவை மாகாண சபை உதவிக் கணக்கில் ஆரம்ப மீதியில் காணப்பட்ட 2016 ஆண்டிற்கான ரூ. 14,450,827 தொகை மீதியில் போதியளவு உறுதிப்படுத்தல் மற்றும் அங்கீகாரம் ஒன்று இன்றி பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் போது உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு செலுத்தப்படட ரூபா 139,053 தொகைக்கான முத்திரை வரிச் செலவு சரியான முறையில் கணக்கீடு செய்திருந்த போதும், நாட்குறிப்பு இலக்கம் 36 இன் மூலம் கடன் கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைத்து, திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) முன்னைய ஆண்டு தொடர்பாக செலுத்தப்பட்ட ரூபா 915,052 இற்கான நிலுவை சம்பள மீளளிப்பு, மீளாய்வாண்டிற்கான வருமானமொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 512,570 தொகைக்கான நிர்மாண வேலை கடன் கொடுத்தோருக்கான ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 3,187,736 இற்கான பங்களிப்பு தொகையை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது தென் மாகாண பிரதான செயலாளர் அலுவலகத்திலிருந்து வெகுமதியாக வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 204,640 தொகைக்கான கணினிகள் மத்திய ஒழுங்குபடுத்தல் அலகு (CPU) இரண்டு மற்றும் இரண்டு UPS களின் கிரயத்ததை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 4,857,550 தொகை எனினும், கணக்குகளில் ரூபா 4,649,016 தொகை என சீராக்கல் செய்திருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 208,534 தொகையினால் குறைந்திருந்தது.

(ஒ) கடந்த ஆண்டு நீதிமன்றத் தண்டப்பணம் குறைவாக சிட்டையிடப்படல் ரூபா 354,334 தொகை மீளாய்வாண்டு 48 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் ரூபா 462,667 தொகை என சீராக்கல் செய்தமையால் ரூபா 108,333 இனால் கடன்பட்டோர் மீதி மற்றும் மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்கு மீதி அதிகரித்திருந்தது.

(ஓ) 2013-2017 காலப் பகுதி தொடர்பாக சபையின் ஊழியர் ஒருவர் பெற்றிருந்த சம்பளமற்ற விடுமுறைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 148,560 தொகை பெறுமதி தொடர்பாக கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்கு

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 16,436,759 தொகைக்கான 03 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுக்கிடையே வித்தியாசங்கள் காணப்பட்டதுடன், அவதானிக்கப்பட்ட சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 204,525 ஆகும்.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) ரூபா 83,019,761 தொகைக்கான நிலுவை ஏனைய வருமான மீதியில் 2008 மற்றும் 2012 ஆண்டுகள் முன்கொண்டுவந்து காணப்படும் ரூபா 76,710,835 தொகைக்கான முத்திரைக் கட்டணம் மற்றும் நீதி மன்றத் தண்டப் பணத்தை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2008 ஆண்டு முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 1,911,375 தொகைக்கான பெற வேண்டிய மாகாண சபை உதவி மற்றும் 2014 மற்றும் 2015 ஆண்டுகள் தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 165,000 தொகைக்கான வீதி விளக்கு உதவித் தொகையினை மீளளிப்புச் செய்துகொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 2014 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 1,386,500 தொகையான முற்கொடுப்பனவு மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) 2014, 2016 காலப்பகுதி தொடர்பாக முத்திரைக் கட்டணம் தயாரிக்கும் பதவியணிகளின் படி ரூபா 90,000 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2008 ஆண்டிற்கு முன்னர் இருந்து முன் கொண்டு வரப்படும் ரூபா 170,958 இற்கான கடன் கொடுத்தோர் மீதியை இணங்கண்டு தீாப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

**தகவல்கள் கணக்காய்விற்காக சமர்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 61,648,302 தொகைக்கான 12 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132(ஓ) | 205,480 | உள்ளூராட்சி விளையாட்டு விழா வுக்காக விடயத்திற்கு பொறுப்பான கௌரவ அமைச்சரின் அங்கீகாரம் இன்றி 05 சந்தர்ப்பங்களில் செலவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் | 56,270 | பிரதியீட்டு ஊழியர்கள் 07 பேர்களுக்காக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய 3% பங்களிப்புத் தொகை உரிய முறையில் அனுப்பப் படாமையால் 2017 செப்டம்பர் மாதம் மிகை விதிப்புத் தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | **1988 பிரதேச சபை (நிதி நிருவாக) விதி** | | |
| | (i) விதி 33 | - | வீதி வரி செலுத்துவதை புறக்கணிப்பு நபர்கள் தொடர்பாக அட்டவணைகள் மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. |
| | (ii) விதி 59 | - | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற் கொள்ளப்பட்டு கைத்தொழில்கள் பற்றிய அட்டவணை ஒன்று தயாரித்திருக்கவில்லை. |
| | (iii) விதி 145 | - | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக விரிவான கூற்றொன்று தயாரித்து, பேரேட்டில் காணப்படும் மீதியுடன் சீராக்கல் செய்திருக்கவில்லை. |
| | (iv) விதி 180 | - | பணத்திற்கு பொறுப்பாக செயற்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தர்களின் நியமனத் திகதி முதல் ஒரு மாதத்தினுள் பிணைமுறி ஒன்று சமர்பிக்கப்பட வேண்டுமெனினும், அதற்காக இணக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (v) விதி 217 | - | சபைக்கு சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பதிவேடு ஒன்று பீ எஸ் 46 இலக்க படிவத்தின் பிரகாரம் பேணப்பட்டு நாளது வரை ஆக்கியிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப் பிரமாணம் 102 முதல் 110 வரை | - | காணாமல் போதல் சேதமடைதல் மீதான அறிக்கை கணக்காய்விற்கு சமர்பித்திருக்காததுடன் சேதங்கள் தொடர்பான பதிவேடு ஒன்றும் பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப் பிரமாணம் 396(ஈ) | 53,827 | பொது கணக்கில் இருந்து வழங்கப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவுக்காக சமர்பிக்கப்படாத செல்லுபடியாகும் காலம் முடிவடைந்துள்ள 06 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(iii) நிதிப் பிரமாணம் 1645 மற்றும் 1646 - சபைக்குச் சொந்தமான 18 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த செயலாற்றுகை பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்க வில்லை.

(உ) 2002 நவம்பர் 28 ஆம் திகதியில் IAI/2002/02 இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்றறிக்கை - சபையில் காணப்படும் கணினிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 27,977,943 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 22,013,279 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 5,017,000 | 4,804,198 | 3,873,000 | 8,097,992 | 5,217,000 | 4,596,294 | 3,096,611 | 7,166,794 |
| வாடகை | 2,869,700 | 2,066,397 | 2,175,252 | 571,100 | 2,660,000 | 2,144,825 | 2,073,750 | 679,955 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,651,000 | 2,502,469 | 2,568,172 | 500 | 1,932,000 | 2,571,190 | 2,614,940 | 66,203 |
| | 9,537,700 | 9,373,064 | 8,616,424 | 8,669,592 | 9,809,000 | 9,312,309 | 7,785,301 | 7,912,952 |

**2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை**

மீளாய்வாண்டிற்காக மதிப்பீட்டு வருமானம் ரூபா 9,537,700 தொகையும் சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 9,373,064 தொகையும் ஆண்டின் போது சேகரிக்கப்படட வருமானம் ரூபா 8,616,424 தொகையும் காணப்பட்டதுடன், நிலுவை வருமானம் ரூபா 8,669,592 தொகையாக காணப்பட்டது.

**2.2.3 வீத வரியும் வரியும்**

மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 11,970,992 தொகைக்கான வீத வரி மற்றும் வரிகளில், ஆண்டின் போது ரூபா 3,873,000 தொகை அறவிடப்பட்டிருந்தமையினால் வருட இறுதியில் உள்ளவாறு வீத வரியும் வரிகள் மீதி ரூபா 8,097,992 தொகை ஆகக் காணப்பட்டது. ஆரம்ப மீதிக்கு ஒப்பாக இறுதி மீதி ரூபா 931,198 தொகையினால் அதிகரித்திருந்தது.

**2.2.4 வாடகை**

மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,746,352 இற்கான வாடகைத் தொகையில் ஆண்டின் போது அறவீடு செய்தல் 79 சதவீதமாகும்.

**2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம்**

மாகாண சபையின் பிரதான செயளாலரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 71,933,600 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 9,009,786 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**2.4 மிகை விதிப்பு**

பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புச் சொல்லப்பட வேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் கடந்த ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட 04 மிகை விதிப்புக்கள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,682,125 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேசசபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கை திட்டம்**

ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிக் காணப்பட்ட செயல்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 94 இன் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற அனைத்து குப்பைகளும் பிரதேச சபையின் ஆதனம் ஒன்றாக இருக்க வேண்டுமெனினும், உக்காத குப்பைகளை மாத்திரம் சேகரித்து வெளி நபருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் PL/1/5/12 இலக்கம் கொண்ட குப்பை முகாமைத்துவ அலுவல்களை முறைப்படுத்துவதற்கான சுற்றறிக்கையின் பிரகாரம் அதி மேதகு ஜனாதிபதி அவர்களினால் 2017 ஏப்ரல் 20 திகதி 2015/53 இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பொது மக்கள் பாதுகாப்பு சட்டத்தின் 42 அதிகாரத்தின் கீழ் குப்பைகள் தொடர்பாக அனைத்து செயன்முறைகளை போலவே விற்பனை செய்தலும், ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனம் நிறைவேற்ற வேண்டிய முக்கிய சேவையாக ஆக்கப்பட்டிருந்த போதிலும், சபையின் அதிகார பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் தொடர்பாக எது வித திட்டமொன்றும் மற்றும் வேலை திட்டமொன்று சபையிடம் காணப்படவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்காகிய உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபை அதிகார பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகாலத் திட்டம் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

**கடைகளை வாடகைக்கு கொடுத்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த பின்னதுவ வர்த்தக கடைத் தொகுதி அமைந்துள்ள காணியின் உரிமை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உரித்தாக இருந்ததுடன், உரிமையை சபைக்கு உரித்தாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) வர்த்தக கடைத்தொகுதியின் 02 இலக்கக் கடையின் உடன்படிக்கைக் காலம் 2009 செப்தெம்பர் 24 திகதி முடிவடைந்து இருந்த போதிலும், உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) வர்த்தக கடைத் தொகுதியில் 06 ஆம் இலக்க கடையில் இருந்து ஆண்டின் போது பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்காததுடன், திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 177,650 தொகையாக இருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) (i) முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 03, தகன சாலை உதவியாளர் பதவி ஒன்று மற்றும் நூலக உதவியாளர் பதவி ஒன்று வெற்றிடமாக காணப்பட்ட

போதிலும், அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2006 ஏப்ரல் 10 திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இணங்காத முறையில் சபையினால் பிரதியீட்டு அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 07 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,630,827 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) ஊழியர் கடன்**

மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட ஊழியர் கடன் மீதியில் ஓய்வு பெற்றுள்ள, இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ள 09 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 157,256 இற்கான கடன் மீதி அடங்கியிருந்த போதிலும், அந்த கடன் மீதியை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான கப் வண்டி ஒன்று 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) டெய்லருடன் ஆன கைடிரடக்டர் ஒன்று 02 வருடங்களை விட மிகையான காலம் முதல் சபையின் வளவில் நிறுத்தப்பட்டிருந்தது.

### 3.4.2 உரித்தாக்கப்படாத சொத்துக்களை பயன்படுத்தல்

சபையினால் பயன்படுத்தப்படும் கப் வண்டி ஒன்று மற்றும் டெய்லருடனான டிரக்டர் ஒன்று என்பவற்றின் உரிமை சபையிடம் காணப்படவில்லை.

### 3.4.3 வாகனப் பாவணை

2017 நவம்பர் 20 ஆம் திகதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான கப் வண்டியின் ஓட்ட அட்டவணை புத்தகத்தின் பிரகாரம் மைலோ மீற்றர் கிலோ மீற்றர் 477448 என காட்டிய போதிலும், வாகனத்தின் மைலோ மீற்றர் வாசிப்பின் படி கிலோ மீற்றர் 478933 ஆக காணப்பட்டமையினால் 1485 கிலோ மீற்றர் இற்கான வித்தியாசம் ஒன்று கண்டறியப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையே கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 09 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 42,460,644 தொகையான சேமிப்புக் காணப்பட்டதுடன் அப் பெறுமதி 18 சதவீதம் முதல் 98 சதவீத வீச்சில் காணப்பட்டது.

(ஆ) செலவு விடயம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்டிருந்த எல்லைகளை மிகைத்து ரூபா 796,132 தொகைக்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அப் பெறுமதி 452 சதவீதமாகும்.

(இ) 05 வருமான விடயங்களில் பிரதிகூலமாக முரண்கள் ரூபா 15,828,816 தொகையாக இருந்ததுடன், அப்பெறுமதி 04 சதவீதம் முதல் 28 சதவீத இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

## 4.2 உள்ளக கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாரின் (தென்மாகாணம்) 2014 பெப்ரவரி 24 திகதி தபபா/யஹ/01/ ந.ச.லே. இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் நியமனம் செய்திருந்த போதிலும், போதியளவான உள்ளகக் கணக்காய்வு ஒன்ற மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கடந்த காலம் முதல் காணப்படும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகளை தீர்த்திருக்கவில்லை. |
| | | (ii) | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்த்திருக்கவில்லை. |
| (ஆ) | சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் | (i) | நிலையான சொத்துக்ள தொடர்பாக மற்றும் கணினிகள் தொடர்பாக வெவ்வேறாக நிலையான சொத்துகள் பதிவேடுகளும் பேணப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீதான வருடாந்த கணிப்பீடு நடாத்தியிருக்கவில்லை |
| (இ) | பதவியணி முகாமைத்துவம் | (i) | பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மிகை பதவியிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை |
| | | (ii) | அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | எரிபொருள் எரிதல் பரிசோதித்திருக்கவில்லை |
| | | (ii) | செயற்படாத வாகனங்கள் திருத்துவதற்கு/ அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (iii) | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த செயலாற்றுகை பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (உ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானம் அறவீடு செய்திருக்கவில்லை. |
| | | (ii) | பழுதடைந்து காணப்பட்ட கடைகள் திருத்தி வாடகைக்கு கொடுப்பதன் மூலம் வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை |
| (ஊ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | 03 வருமான விடயங்களில் பிரதி கூலமான முரண்கள் ஏற்பட்டிருந்தது. |
| | | (ii) | வருமான மற்றும் செலவுகள் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுத்து பாதீட்டு திருத்தி கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. |